www.Padasalai.Net www.TrbTnpsc.com

Vnr11His

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

வகுப்பு 11

வரலாறு

கால அளவு: 3.00 மணிநேரம் மொத்த மதிப்பெண்கள்: 90

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

2) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **20×1=20**

1) ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக ----- இருந்தது

அ) வேளாண்மை ஆ) மட்பாண்டம் செய்தல்

இ) கைவினைத் தொழில்கள் ஈ) மீன் பிடித்தல்

2) மேல் கங்கைச் சமவெளிப் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ) குரு-பாஞ்சாலம் ஆ) கங்கைச் சமவெளி இ) சிந்துவெளி ஈ) விதேகா

3) பகவதி சூத்திரம் ஒரு ----- நூலாகும்

அ) பௌத்தம் ஆ) சமணம் இ) ஆசீவகம் ஈ) வேதம்

4) மெகஸ்தனிஸ் எழுதிய ----- சந்திரகுப்பதரின் அரசவையையும் அவரது நிர்வாகத்தையும் விவரிக்கிறது

அ) இண்டிகா ஆ) முத்ராராட்சசம் இ) அஷ்டத்யாயி ஈ) அர்த்தசாஸ்திரம்

5) கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது?

i) தலையாலங்கானம் - நெடுஞ்செழியன்

ii) பட்டினப்பாலை - உருந்திரங்கண்ணனார்

iii) கஜபாகு - இலங்கை

iv) திருவஞ்சிக்களம் - சோழர்

அ) (i) ஆ) (ii) இ) (iii) ஈ) (iv)

6) இந்தோ-கிரேக்க அரசர்களில் நன்கறியப்பட்டவர் -------

அ) யூதிடெமஸ் ஆ) டெமெட்ரியஸ் இ) மினாண்டர் ஈ) ஆண்டியால்ஸைடஸ்

7) தாக்கம் குறித்த முதல் முழுமையான பௌத்த நூலை எழுதியவர் -------

அ) திக்நாகர் ஆ) வசுபந்து இ) சந்திரகாமியா ஈ) வராகமிகிரர்

8) கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?

அ) தர்மபாலர் சோமபுரியில் பெரியதொரு பௌத்த விகாரையைக் கட்டினார்

ஆ) இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார்

இ) மகிபாலர் கீதங்கள் வங்காளத்தின் கிராமப்பகுதிகளில் இப்போதும் பாடப்படுகின்றன

ஈ) கௌடபாடர் ஆகம சாத்திரத்தை இயற்றினார்

9) அரச குடும்பம் தொடர்பான சடங்குகளை நடத்துவதற்காகச் சாளுக்கியரால் கட்டப்பட்ட கோவில்கள் எங்கு உள்ளது?

அ) ஐஹோல் ஆ) வாதாபி இ) மேகுடி ஈ) பட்டாடக்கல்

10) இபின் பதூதா ஒரு ----- நாட்டுப் பயணி

அ) மொராக்கோ ஆ) பெர்சியா இ) துருக்கி இ) சீனா

11) ----- பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும்

ஆ) மதுரை ஆ) காயல்பட்டினம் இ) கொற்கை ஈ) புகார்

12) ----- கோல்கொண்டா கோட்டையைக் கட்டினார்

அ) இராஜா கிருஷ்ண தேவ் ஆ) சுல்தான் குலி-குதுப்-உல்-முல்க்

இ) முகமது கவான் ஈ) பாமன்ஷா

13) கூற்று : மத சீர்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர்

காரணம் : அவர்கள் சிலை வழிபாட்டை விமர்சித்தனர்

அ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

ஆ) கூற்று தவறு, காரணம் தவறு இ) கூற்று தவறு, காரணம் சரி

ஈ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்

14) ----- சேர்ந்த தான்சேன் அக்பரால் ஆதரிக்கப்பட்டார்

அ) ஆக்ரா ஆ) குவாலியர் இ) தில்லி ஈ) மதுரா

15) பொருத்துக:

i) அபுல் பாசல் - ஔரங்கசீப்

ii) ஜீம்மா மசூதி - அக்பர்

iii) பாதுஷாஹி மசூதி - ஷெர்ஷா

iv) புராணகிலா - ஷாஜகான்

அ) 2, 4, 1, 3 ஆ) 3, 2, 1, 4 இ) 3, 1, 4, 2 ஈ) 1, 3, 2, 4

16) வலிமைமிக்க கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றியோர் -----

அ) மராத்தியர் ஆ) முகலாயர் இ) ஆங்கிலேயர் ஈ) நாயக்கர்

17) முதலாம் கர்நாடகப் போரின் போது ----- புதுச்சேரியின் ஆளுநராக இருந்தார்

அ) பீட்டன் ஆ) லா போர்டோனாய்ஸ் இ) துய்ப்ளே ஈ) மோர்ஸ்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

18) இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தியவர் -----
அ) காரன்வாலிஸ் ஆ) தாமஸ் மன்றோ இ) ராபர்ட் கிளைவ் ஈ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

19) வேலூர் புரட்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்த நிகழ்வு ----- ஆகும்
அ) என்ஃபீல்டு ரக துப்பாக்கித் தோட்டாக்கள் ஆ) நவீன சீருடை மாற்றம்
இ) புதிய தலைப்பாகை ஈ) கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள்

20) 'இந்திய மறுமலர்ச்சியின் தந்தை' ----- ஆவார்
அ) விவேகானந்தர் ஆ) தயானந்த சரஸ்வதி
இ) இராஜா ராம்மோகன் ராய் ஈ) ஆத்மராம் பாண்டுரங்

## பிரிவு - II

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 கட்டாய வினா: 7×2=14**

21) பழங்கற்காலம் எவ்வாறு பிரிக்கப்படுகிறது?
22) பிம்பிசாரர் எவ்வாறு மகதப் பேரரசை விரிவுபடுத்தினார்?
23) மதுரைக் காஞ்சியிலிருந்து நீ அறிவது என்ன?
24) யவன என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?
25) அலகாபாத் தூண் கல்வெட்டுக் குறித்து கூறுக.
26) ஹர்ஷர் எவ்வாறு கன்னோசியின் மன்னரானார்?
27) கஜினி மாமுது ஆதரித்த அறிஞர்கள்.
28) கனோஜி ஆங்கிரே பற்றி நீ அறிந்தவற்றைப் பற்றி எழுதுக.
29) ஆளுநர் தாமஸ் மன்றோ பற்றி சிறுகுறிப்பு வரைக.
30) பக்தி இயக்கத்திற்கு இராமானுஜர் ஆற்றிய சேவைகள் யாவை?

## பிரிவு - III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 கட்டாய வினா. 7×3=21**

31) மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.
32) காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு குறித்து மதிப்பிடுக.
33) எல்லோராவிலுள்ள கைலாசநாதர் குகைக்கோவில்.
34) பாமினி அரசு எவ்வாறு நிறுவப்பட்டது? யாரால் நிறுவப்பட்டது?
35) அபுல் பாசல்
36) மராத்தியரின் எழுச்சிக்கான காரணங்கள் யாவை?
37) ஆனந்தரங்கர் நாட்குறிப்பு
38) இரட்டை ஆட்சி முறை
39) 1857ம் ஆண்டு புரட்சியின் விளைவுகள் யாவை?
40) குப்தர் காலத்தில் அறிவியல் வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.

## பிரிவு - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7×5=35**

41) அ) திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொகஞ்சதாரோ பற்றி எழுதுக. **(அல்லது)**
ஆ) வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

42) அ) மௌரிய ஆட்சியமைப்பின் முக்கியக் கூறுகளை விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) கலைக்கும் இலக்கியத்துக்குமான கனிஷ்கரின் பங்களிப்பு குறித்து விவாதிக்கவும்.

43) அ) வட இந்தியாவின் நிலை குறித்த யுவான் சுவாங்கின் கருத்துக்கள் யாவை? **(அல்லது)**
ஆ) பல்லவரின் கப்பல் சார்ந்த செயல்பாடுகளை விவாதி.

44) அ) முதலாம் முகமது ஆட்சியின் கீழ் பாமினி அரசு பற்றி குறிப்பு வரைக. **(அல்லது)**
ஆ) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக.

45) அ) முதலாம் பாஜிராவ் வாழ்க்கையும் சாதனையையும் பற்றி விவாதிக்கவும். **(அல்லது)**
ஆ) வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய துணைப்படைத் திட்டத்தினைப் பற்றி விவரி.

46) அ) 1806ம் ஆண்டின் வேலூர் புரட்சிக்கான காரணங்களையும் போக்கினையும் விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் ஔரங்கசீப் பேரரசின் எல்லையை வரைந்து கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:
1) மாளவம் 2) புரந்தர் 3) தில்லி

47) அ) 1857ஆம் ஆண்டு புரட்சிக்கான காரணங்களையும் மற்றும் விளைவுகளையும் விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) சிவாஜியின் ஆட்சிக்கால நிகழ்வுகளில் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் வரைக.

-----

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com